# University of Jaffna

## Siva Yogaswami Memorial Lecture – 2022



**யாழ்ப்பாணத்து சிவயோக சுவாமிகளும்**
**சர்வதேசத்தில் அவரது சிந்தனைப் பரவலாக்கமும்**

by

**Rishi Thondunathan Swami,**
Disciple of Gurudeva
Sivaya Subramuniyaswami
Hawaii Saiva Adheenam
USA.

on

***Friday 25th March, 2022 at 3.00 p.m***

**at**

**Kailasapathy Auditorium,**

**University of Jaffna.**

# Siva Yogaswami
# Memorial Lecture – 2022

**யாழ்ப்பாணத்து சிவயோக சுவாமிகளும்**
**சர்வதேசத்தில் அவரது சிந்தனைப் பரவலாக்கமும்**

by


**Rishi Thondunathan Swami,**

Disciple of Gurudeva
Sivaya Subramuniyaswami
Hawaii Saiva Adheenam
USA


**25.03.2022**



**சிவயோக சுவாமிகள்**

## துணைவேந்தரின் ஆசிச்செய்தி

*"வெளிமாதிரி யொன்றும் செய்யாதே, உனக்குள் நீ*
*பெலத்துக்கொள், சமயமென்பது ஒருமாதிரி அற்ற*
*தனித்தநிலை; உடல், பொருள், ஆவி மூன்றையும்*
*பகவானுக்கு ஒப்படை; அதன்பின் உன்னைப் பற்றிய*
*எண்ணங்களை மறந்துவிடு, அனைத்தும் அவனே பார்"*

*"நாங்கள் சிவனடியார்கள் எங்களுக்கு ஒரு குறையுமில்லை,*
*சிவத்தொண்டு செய்வதே எங்கள் தொழில்,*
*அதற்காகவே நாங்கள் பூமியில் வாழுகிறோம்."*

சிவயோகசுவாமிகளின் இவ்வுரைப்பகுதிகள் அவரைப் பற்றிய தன்னிலை விளக்கமாகவே அமைகின்றன.

*"சொல்லெல்லாம் மோனம்*
*தொழிலாதியும் மோனம்*
*எல்லாம் தன் மோனநிறைவே"*

என்ற அவரின் நற்சிந்தனை வரிகளுக்கு அவரது வாழ்வே செம்பொருள் விளக்கமாயிற்று. ஏனெனில் இரசேகர சித்தர்களைப் போன்றோ அன்றி வித்தகச் சித்தர்களைப் போன்றோ சிவயோக சுவாமிகளின் செல்நெறி இருந்ததில்லை.

"சும்மா இரு சொல்லற" என்கிற அருணகிரி வாக்கின் பொருளாகவே அவர் வாழ்ந்து காட்டினார்.

ஈழத்துச் சித்தர் மரபின் துருவ நட்சத்திரமாகத் திகழும் சிவயோக சுவாமிகள் திருக்கைலாய பரம்பரையில் நந்திநாத சம்பிரதாயத்தில் வந்த குருப்பரம்பரையின் 161வது சற்குருவாகக் கருதப்படுகிறார். மாவிட்டபுரம் அம்பலவாணர் சின்னாச்சியம்மைக்கு 1872 மே 29 அவிட்ட நட்சத்திரத்தில் மகனாகப் பிறந்த இவர், "முன்னை வினையின் முடிச்சை அவிழ்க்கவல்ல தன்னை உணரும் பக்குவம்

வாய்க்கும் வரையில்" சதாசிவம், யோகநாதன், ஜோன் (பத்திராசிரியர் கல்லூரிப் பதிவேட்டில்) எனப் பல நாமந்தாங்கி இந்த உலகமென்ற நாடகமேடையில் தனக்கு விதிக்கப்பட்ட செயலை ஆற்றினார். "சித்தன்" என்ற பெயர் தமிழ் இலக்கிய மரபில் முதன்முதலில் சிலப்பதிகார நாடுகாண்காதையில் இடம் பெற்றுள்ளது. இதற்கு அடியார்க்கு நல்லார் "செய்ய வேண்டுவனவற்றைச் செய்து முடித்தவன், கன்மங்களைக் கழுவியவன், அதாவது கிருத கிருத்தியன்" எனப் பொருள் கொள்கிறார்.

"சித்த விருத்தியை அடக்கியவனே சித்தன்" என்ற விளக்கமும் இந்துமரபில் உண்டு. அறிதிறன், ஆசை, செயல் ஆகிய முக்கூறுகளைக் கொண்ட தொகுப்பாகச் சித்தத்தைத் தற்காலக் கீழைத்தேய உளவியலாளர்கள் கருதுவர். இம்மூன்று கூறுகளும் ஒன்றிலொன்று பிரியாமல் வலைப்பின்னலாக வளரும் தன்மையின.

*"எட்டுவயதிலே சீலை தோய்க்கவும்*
*செம்புமினுக்கவும் தொடங்கினவர்கள்*
*எண்பதிலும் அதைத்தானே செய்கிறார்கள்"*

என்று யோகர் சுவாமிகள் குறிப்பால் உணர்த்த முற்பட்டதும் இதைத்தான். லௌகீக வாழ்வாகிய சன்னல் பின்னலான தத்துவக் குப்பையைக் கடந்துவர வேண்டுமேயன்றி அச்சேற்றில் அமிழ்ந்தபடியே ஆன்மாவால் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ள இயலாது.

இதனைக் கடந்துவர ஆன்மிக விழிப்பு அவசியம். குருவருளும் இன்றியமையாதது. எத்தகைய குருவருள் அமையினும் ஆன்மாவுக்கு அதனை உணரக்கூடிய ஆன்ம பரிபக்குவம் வாய்த்திருத்தல் இன்றியமையாததாகும். யோகர்சுவாமிகளுக்கு இத்தகைய ஆன்ம விழிப்புநிலை செல்லப்பா சுவாமிகளைச் சந்திப்பதற்கு முன்பே ஏற்பட்டுவிட்டது.

புனித சம்பந்தரிசியார் கல்லூரியில், இடைநிலைக் கல்வியைக் கற்றுக்கொண்டிருந்தபோது தந்தையாரால் மஸ்கெலியாவுக்கு அழைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் யோகரிடம் இத்தகைய பக்குவம் முளைகொண்டு விட்டது எனலாம்.

சிவனொளிபாதமலையில் சூரியோதயத்தைக் கண்ணுற்ற பொழுதுகளில் யோகர், "மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து", "தொழுகையர், அழுகையர் துவழ்கையராகிச்" சிவனையே கண்டதாக அரற்றிய சம்பவங்கள் இதற்குத் தக்க சான்றுகளாகும்.

இரணைமடுக் குளக்கட்டுமானப் பகுதியில் பண்டக சாலைப் பொறுப்பாளராக பிறவுண் என்கிற ஆங்கிலேயப் பொறியியலாளரின் கீழ் பணியாற்றிய சந்தர்ப்பத்திலும் யோகநாதனிடம் இருந்த "சித்தன் போக்கை", ஆன்மிக பரிபக்குவத்தை சகபணியாளர்கள் அனைவரும் உணர்ந்திருந்தனர். குறிப்பாக இவர் நள்ளிரவு வேளைகளில் அம்மையே அப்பா எனப் பெருங்குரலெடுத்து அழுது யோகநிட்டை கூடுகின்ற சம்பவங்கள் சகபணியாளர்களுக்கு விசித்திரமாக அமைந்தன. அதுபோன்றே இவர் தொழில்புரியும் போதே நீண்ட தியானத்தில் அமர்ந்துவிடுவதும் உண்டு.

*"எப்பொழுது எல்லோரும் தூங்குகின்றனரோ*
*அப்போது யோகிகள் விழித்திருக்கிறார்கள்*
*எல்லோர்க்கும் இரவு யோகியர்க்குப் பகல்"*

என்ற ஸ்ரீ கிருஷ்ணரின் பகவத்கீதா வரிகளின் தாற்பரியத்தை யோகர்சுவாமிகளின் மேற்கூறிய நடத்தைகள் பிரதிபலித்தன. பொறியியலாளர் பிறவுண் இவரை உணர்ந்திருந்தாரோ என்னவோ "God Man" (கடவுள் மனிதன்) என்றே இவரைச் சுட்டி அழைப்பாராம்.

இவ்வாறாக ஞானநாட்டம் மிக்க பக்குவ ஆன்மாவாய் பரிணமித்திருந்த யோகருக்கு செல்லப்பா சுவாமிகளைக் காற் புண்ணுக்குக் கைமருந்து சொன்ன மருத்துவராகச் சந்திக்கும்

முதல் அனுபவம் வாய்க்கிறது. அவரே பின்னாளில் சிவயோகருக்குப் பிறவிப் பிணி வெல்லும் மார்க்கத்தைக் காட்டிய வைத்தியநாதனாகிய கதையினை யாவரும் அறிவர்.

*"பேரறிவாளனைப் பிறரெவருமோவறியார்*
*பித்தனென் றுலகோர் பேசுவர் ஏசுவர்"*

எனத் தன்குருநாதனைப் பற்றிப் பின்னாளில் நற்சிந்தனையில் யோகர் சுட்டுவார். "தேரடியிற் தேசிகனைக் கண்டு தரிசிக்கும்" பக்குவத்தை ஏலவே யோகர் தன்னுள்ளே வளர்த்திருந்த காரணத்தினாலேயே சாமானியர்க்கு "சகம் பேய் என்று தம்மைச் சிரிப்ப" விசர்க்கோலம் பூண்டிருந்த செல்லப்பருக்குள் இருந்த ஞானத்தை உணரமுடிந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒரு துணைவேந்தராக, பேராசிரியராக மாணவர்க்குக் கூறிக்கொள்ள விழைவதும் இதுவே. ஞானகுருவாக இருப்பினும் உன்னுள் தீப்பொறி இருந்தால் மட்டுமே அவரால் அதனை ஊதி ஜுவாலையாக்க இயலும்.

*"ஞானநாட்டம் இல்லாத சீடர்க்கு ஸ்ரீமத் நாராயணனே*
*குருவாகவரினும் ஆன்மசித்தி கிட்டாது.*

*அர்ச்சுனனைப் போன்ற ஒரு பக்குவ ஆன்மாவினாலேயே ஸ்ரீ கிருஷ்ண*
*பரமாத்மாவின் கீதோபதேசத்தைக் கிரகிக்க முடிந்தது."*

இது ஞானவாழ்வுக்கு மட்டுமன்றி நடைமுறை வாழ்வுக்கும் பொருந்தும். கற்றுக்கொள்ள வேண்டும் என்கிற தாகத்தோடு அதற்கான பிராரம்ப முயற்சிகளை எடுக்கின்ற மாணவர்க்கே கனவு மெய்ப்படும். கைவசமாவது விரைவில் கிட்டும்.

செல்லப்பா சுவாமிகளினால் சந்நியாச தீட்சை வழங்கப்பட்ட சிவயோக சுவாமிகள் தான்பெற்ற ஞானவித்தையை நாடெங்கும் பரப்புவதற்குச் சீடர்களைப் பெற்றிருந்தார். மார்க்கண்டு சுவாமிகள், செல்லத்துரை சுவாமிகள், சந்த சுவாமிகள் (சோல்பெரி பிரபுவின்

மகன்), சுப்பிரமணிய சுவாமிகள் (ஹவாய் ஆதீனம்), யேர்மன் சுவாமிகள் (கௌரிபாலா), பரிநரிக்குட்டி சுவாமிகள் (அவுஸ்ரேலியா) என்போர் அவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள்.

சிவயோகர் தனது ஆன்மிகப் பயணத்தில் சுவாமி விவேகானந்தர், சுவாமி விபுலாநந்தர், மகான் ஸ்ரீ ரமணர், மட்டக்களப்பு ஆனைக்குட்டி சுவாமிகள் ஆகியோருடன் ஆன்மிக அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார். இலங்கையின் பல பாகங்களிலும் திருமுறைப் பாராயணம் குறிப்பாகச் சிவபுராண பாராயணம் செய்யும் வழக்கத்தை ஊக்குவித்தார். தனிநபர்கள் வாழ்வில் ஏற்பட்ட கையறு நிலைகளில் தலையிட்டு அவர்களைத் தனது அற்புதங்களினாலும், அறிவுரைகளினாலும் ஆற்றுப்படுத்தினார். சிவதொண்டன் நிலையமும், சிவதொண்டன் வெளியீடும் உற்பவிக்க ஆதர்ச காரணமாய் அமைந்தார்.

கொழும்புத்துறை சம்பந்தர் வளவிலுள்ள இலுப்பை மரத்தடியில் எத்தகைய ஆரவாரமுமின்றி அமைதியாக யோகநிட்டை கூடிய ஒருவரால் கண்டங்கடந்து தனது அருட்கடாட்சத்தை விகசிக்க முடிந்தமை வியப்புக்குரியதே.

*“திக்குந் திகாந்தமெல்லாம்*
*எங்கள் குருநாதன்*
*சித்தத்துள் நிற்கவைத்தான்*
*எங்கள் குருநாதன்.”*

அவர் மகாசமாதியடைந்த 25.03.1964 தினத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வோராண்டும் நடைபெற இருக்கின்ற இந்நினைவுப் பேருரைத் தொடரின் முதலாவது பேருரையினை வழங்க இருக்கும் ரிஷி தொண்டுநாத சுவாமிகளை வாழ்த்தி வணங்குகிறேன்.

சிவயோக சுவாமிகளின் கான்முளையாக அவரின் அடிச் சுவட்டில் வந்த ரிஷி தொண்டுநாத சுவாமிகள் இந்துக் கற்கைகள் பீடத்தினால்

நடாத்தப்படுகின்ற இந்நினைவுப் பேருரைத் தொடரை ஆரம்பித்து வைப்பதற்கு மிகவும் உரித்துடையவர். இவர் சிவயோக சுவாமிகளின் அணுக்கச் சீடர்களில் ஒருவராகிய ஹவாய் சைவ ஆதீன ஸ்தாபகர் சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர். ஹவாய் ஆதீனத்தில் ஒரு மாமாங்கக் காலம் சிவாய சுப்பிரமணிய சுவாமிகளுடன் உடனுறைந்து உபதேசம் பெற்றவர். தனது குருநாதரால் 1991 ஆம் ஆண்டு மகாசிவராத்திரி தினத்தில் "ரிஷி தொண்டுநாதன்" எனும் தீட்சா நாமத்தைப் பெற்றவர்.

தனது பரமகுருநாதரின் மகா சமாதி தினத்தையொட்டி நிகழ இருக்கின்ற இந்நினைவுப் பேருரையை ரிஷி தொண்டுநாதரே நிகழ்த்த இருப்பது அவருக்கும் எமக்கும் சிவயோகர் தந்த பாக்கியமாகவே கருதப்படவேண்டியதாகும்.

**பேராசிரியர் கலாநிதி சி.சிறிசற்குணராஜா**
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## யாழ்ப்பாணத்து சிவயோக சுவாமிகளும் சர்வதேசத்தில் அவரது சிந்தனைப் பரவலாக்கமும்.

### முன்னுரை

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிவயோக சுவாமிகள் நினைவுப் பேருரையை நிகழ்த்துவதற்காக என்னை அழைத்த துணைவேந்தர், இந்துக்கற்கைகள் பீடாதிபதி மற்றும் பல்கலைக் கழக சமூகத்தினருக்கு என் நன்றிகளை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவயோக சுவாமிகளின் மீளா அடியவரும் புகழ்பூத்த இராமநாதன் கல்லூரியின் முன்னாள் அதிபரும், பின்னாளில் வடமாகாண கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றிய திருமதி இரத்னாமா. நவரத்தினம் அவர்களின் விருப்பத்திற்கு இணங்க 'யோகர் சுவாமிகள் திருவடி அறக்கட்டளை'யின் அனுசரணையுடன் இந்த நினைவுப்பேருரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது சிறப்புக்குரியது. இவ்வருடம் சிவயோக சுவாமிகள் பிறந்து நூற்றி ஐம்பது வருடங்கள் நிறைவு பெறுவதும் சிறப்புக்குரிய செய்தியாகும்.

### அறிமுகம்

யாழ்ப்பாணத்து மாமுனிவர் என சிறப்பித்துப் போற்றப்படும் சிவயோக சுவாமிகள் கொழும்புத் துறையில் அமைந்திருந்த குடிசையில் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக தவ வாழ்க்கை வாழ்ந்து வழங்கிய ஆத்மஞானப் போதனைகள் நற்சிந்தனை எனும் நூல் வடிவில் சுவாமிகளது சீடர்கள் மூலமாக சர்வதேசமெங்கும் பரவியுள்ளது. இவை தமிழில் மட்டுமன்றி, ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டிருப்பது போல, சுவாமிகளது வாழ்வும், சிந்தனை களும் தொடர்பாக பல ஆங்கில நூல்களும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. சுவாமிகளது போதனைகளை ஆயிரக்கணக்கான ஆங்கிலேயர்களும் தங்கள் அன்றாட வாழ்வில் கைக்கொண்டு வருகிறார்கள்.

அமெரிக்கா, ஐரோப்பா போன்ற மேலை நாடுகளில் மட்டுமன்றி, ஆபிரிக்கா கண்டத்திலுள்ள மொறிசியஸ், றீயூனியன் போன்ற நாடுகளிலும், ரஷ்யாவிலும், ஆசியாக் கண்டத்திலுள்ள இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் சைவசத்சங்கங்கள் உருவாக்கப்பட்டு நூல் வடிவிலும், இணையத்தளம் ஊடாகவும் பல மொழிகளில் சுவாமிகளது போதனைகள் தற்போது மக்களை சென்றடைகிறது என்பதை சிறப்பாகச் சொல்லலாம்.

**சிவயோக சுவாமிகளின் வரலாற்றுச் சுருக்கம்.**

அடுத்து சிவயோக சுவாமிகளது வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாக நோக்குவோம்.

யாழ்ப்பாணத்திலுள்ள மாவிட்டபுரம் என்னும் கிராமத்திலே 1872 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி சிவயோக சுவாமிகள் பிறந்தார். இவருக்கு பெற்றோர் சூட்டிய திருநாமம் சதாசிவன். இளம் வயதிலேயே தாயை இழந்த சதாசிவன் யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் உள்ள கொழும்புத்துறை என்னும் கிராமத்தில் வாழ்ந்த அவரது தந்தையின் சகோதரியால் வளர்க்கப்பட்டார். தனது கல்லூரிப் படிப்பை நிறைவு செய்து கொண்டபின் கிளிநொச்சி இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தில் பண்டகசாலைப் பொறுப் பாளராகக் கடமையாற்றினார். அப்போது தன் ஓய்வு நேரம் முழுவதையும் சமயப் பயிற்சியில் செலவிட்டார். தியானம், திருமுறை பாராயணம் போன்ற ஆன்மீக சாதனைகளை மேற்கொண்டார். ஆன்மீக சாதனை அவரை ஈர்க்கவே இறுதியில் தனது முப்பதாவது வயதில் வேலையில் இருந்து விலகி தனது வாழ்வை முழுமையாக ஆன்மீக சாதனையில் ஈடுபடுத்திக் கொண்டார்.

அக்காலத்தில் நல்லூர்த் தேரடியில் வாழ்ந்த செல்லப்பா சுவாமிகளின் பெருமையைக் கூறக் கேட்ட சதாசிவன் ஒருநாள் சுவாமிகளைத் தரிசிப்பதற்காக நல்லூருக்குச் சென்றார். தனது சற்குருவை முதன் முதலில் சந்தித்தது குறித்து அவர் பின்னர் பல

நற்சிந்தனைப் பாடல்களில் அழகாகக் கூறியுள்ளார். தேரடியில் சதாசிவனின் செவிகளில் ஒலித்தவை "ஆரடா நீ? தேரடாவுள்! தீரடாபற்று". மலைத்து நின்ற சீடனைப் பெருங் கருணையோடு நோக்கிய சற்குருநாதன் "உன்னைத் தான் பார்த்திருந்தேன். உனக்கே பட்டம் சூட்டப் போகின்றேன். வாவா" என்று அருகிலழைத்து அன்போடு ஞானஉபதேசம் அருளினார். அன்று முதல் ஐந்து ஆண்டுகள் செல்லப்பா சுவாமிகளுடன் வாழ்ந்து கடும் தவம் ஆற்றிய சதாசிவன் தனது சற்குருவிடமிருந்து அருட்தீட்சை பெற்று யோகசுவாமிகள் ஆனார். பின் தனது குருவின் ஆணைப்படி சிவயோக சுவாமிகள் கால்நடையாக கதிர்காம யாத்திரை மேற்கொண்டார். ஓராண்டு காலம் இலங்கை முழுவதையும் பாத யாத்திரையாக அவர் சுற்றிவந்தார். பாதயாத்திரை முடித்துக் கொண்டு குருவிடம் திரும்பி வந்த சிவயோக சுவாமிகளைப் பார்த்துச் செல்லப்பாசுவாமிகள் "யோகா! இரண்டு யானைகள் ஒரு முனையிற் கட்டமுடியாது. நீ கொழும்புத்துறைச் சந்தியில் இலுப்பைமர வேரைப் பார்" என்றார்.

தனது குருவின் ஆணைப்படி சிவயோக சுவாமிகள் கொழும்புத் துறைச் சந்தியில் இருந்த இலுப்பை மரத்தடியில் பல நாட்களாக தியான நிலையில் அமர்ந்திருந்தார். அந்த இலுப்பை மரத்திற்கு பக்கத்தில் வாழ்ந்து வந்த தங்கம்மா என்னும் அம்மையாரும் அவரது சகோதரன் வல்லிபுரம் என்பவரும் பலமுறை வேண்டிக் கேட்டுக்கொண்டதற்கு அமைய, அந்த அம்மையாரின் வளவிலிருந்த ஒரு சிறுகுடிசையில் சிவயோக சுவாமிகள் தங்கினார். இது 1914 ஆம் ஆண்டளவில் நிகழ்ந்தது. சிவயோக சுவாமிகள் தனது வாழ்வின் அடுத்த ஐம்பது ஆண்டுகளையும் கிடுகுகளால் வேயப்பட்ட அந்தச் சிறுகுடிசையில் கழித்தார். தொடக்கத்திலே அணுகுவதற்கு முடியாதவராக இருந்தார். ஆனால் காலப்போக்கில் சில அடியவர்களை அருகில் வர அனுமதித்தார். மிக விரைவில் அந்தக் கொழும்புத்துறைக் குடிசை இலங்கை முழுவதற்கும் அருள்

வழங்கும் ஆன்மீகத் திருவுருவத்தின் ஆச்சிரமமாக மாறியது. வாழ்வின் பலதுறைகளைச் சார்ந்த மக்களும் இக்குடிசைக்கு வந்தனர். இளையோர், முதியோர், கமக்காரர், மந்திரிகள், நீதிபதிகள், மருத்துவர்கள் அரசியல்வாதிகள் என அனைவரும் உண்மையை நாடியே அக்குடிசைக்கு வந்தனர். அத்தருணத்தில் ஒருநாள் தனது குருநாதர் செல்லப்பா சுவாமிகள் நோய் வாய்ப்பட்டிருப்பதாக அறிந்து அவருக்குப் பணிவிடை செய்வதற்காக சிவயோக சுவாமிகள் விரைந்து சென்றார். அவர் வருகையை அறிந்த செல்லப்பா சுவாமிகள் அவர் உள்ளே செல்வதன் முன் அவருக்கு கேட்கும் படியாக உரத்த குரலில் "வெளியே நின்று பார்!" என்றார். சிவயோக சுவாமிகளும் குருநாதர் சொற்கேட்டு உள்ளே போகாமல் வெளியே நின்று அகக் கண்ணால் அவரைக் கண்டு வணங்கினார்.

நெடுந்தூரத்திலிருந்து வரும் யாத்திரிகர்களும் தினம் வரும் அயல் பக்தர்களும் சுவாமிகளின் திருவடியின் கீழ் ஒன்று கூடி அங்கு விரிக்கப்பட்டுள்ள பாய்மீது அமர்ந்திருப்பார்கள். பொதுவாக அவரது ஆச்சிரமத்திற்கு மாலை நேரத்திலேயே பக்தர்கள் வந்தனர். சைவமார்க்கம் பற்றியும் பண்டைக்கால முனிவர்கள் ஞானிகள் பற்றியும் வேதாந்த சித்தாந்த தத்துவத்தின் தனது கோட்பாடு பற்றியும் சுவாமிகள் பேசுவார். சுவாமிகளும் அடியவர்களும் சேர்ந்து பக்திப் பாடல்களைப் பாடுவர். ஆழ்ந்த விஷயங்கள் குறித்தும் உலகியல் விஷயங்கள் பற்றியும் அவர் பேசுவார் அல்லது அடியவர்களுடன் மௌனத்தில் ஆழ்ந்திருப்பார். தன்னிடம் வருபவர்களுக்கு எல்லாம் சனாதன தர்மத்தின் அழியாத உண்மைகளை சிவயோக சுவாமிகள் வலியுறுத்தி வந்தார். அடியவர்களுக்கு அவர் வழங்கிய கட்டளைகள் நபருக்கு நபர் மாறுபடும். பொதுவான ஒரு பரிகாரத்தை அவர் தருவதில்லை. யாருக்கு எது தேவையோ அதைத் துல்லியமாக அருளினார். ஒருவருக்கு யோக சாதனையை வழங்குவார். மற்றவருக்கு

பக்தியையும் உபாசனையையும் கற்பிப்பார். வியாதிக்கு ஏற்ற மருந்து என்று சுவாமிகள் கூறுவதுண்டு. சுவாமிகள் அடியவர்கள் சகிதம் பலமுறை இந்தியாவுக்கு திருத்தல யாத்திரைகளையும் மேற்கொண்டார்.

வெள்ளைவேட்டியும் சால்வையும் மட்டுமே சிவயோகசுவாமிகள் அணிந்திருப்பார். உயர்ந்த தோற்றமும் ஆரோக்கியமான திருமேனியுமுடைய சுவாமிகள் யாழ்ப்பாணத்து வீதிகள் வழியாகவும் வயல் வெளிகளினூடாகவும் தினமும் பல மைல்கள் தூரம் நடப்பார். தனது வெண்மையான தாடியும் தலைமுடியும் சூரிய ஒளியில் பிரகாசிக்க கறுப்புக் குடையுடன் சிவயோக சுவாமிகள் யாழ் குடாநாட்டு வீதிகளில் கம்பீரநடையுடன் பவனிவருவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். தினமும் சூரிய உதயத்துக்கு முன் எழுந்து தனது குடிசையில் திருவடி வழிபாடுசெய்வார். தனது கைலாச பரம்பரையில் வந்த ஏனைய சற்குருமாரைப் போன்றே சிவயோக சுவாமிகளும் ஒரு யோகியும் சித்தரும் ஆவார். பலஆண்டுகளின் தீவிர ஆன்மீக சாதனை அவருக்குப் பல அக ஆற்றல்களை எழுப்பியிருந்தன. ஆயினும் சிவயோக சுவாமிகள் அவை பற்றிப் பேசமாட்டார். தன்னைக் காணவருபவர்களை அவர்கள் வருவதற்கு முன்னமே சுவாமிகள் அறிந்திருந்தார் எனவும் அவர்கள் பேசுவதற்கு முன்னாலேயே அவர்களின் எண்ணங்களை அறிந்திருந்தார் எனவும் அவரது சீடர்கள் கண்டனர். அவரது அகக் காட்சியில் இருந்து எதையும் மறைக்க முடியவில்லை. தனது வாழ்வில் பிற்பகுதியில் அவர் அக நிலையில் மேலும் விழிப்புணர்வு மிக்கவராய் இருந்ததோடு தனது பக்தர்கள் முன்னிலையிலேயே அகவுலகங்களில் தேவர்களோடும் பேசி வந்தார். பல மேலைத்தேசத்தவர்கள் கூட சுவாமிகளைத் தரிசிக்க வந்தனர். அடியவர்கள் வாழ்வில் சுவாமிகள் புரிந்த அற்புதங்களோ ஏராளம். பிற்காலத்தில் இந்த அற்புத நிகழ்ச்சிகள் பலமொழிக ளிலும் நூல்களாக அடியவர்களினால் வெளியிடப்பட்டுள்ளன.

பல பாடல்களை சிவயோக சுவாமிகள் தம் வாழ்வில் பாடியருளினார். அவை அவர் அகத்திலிருந்தே வெளிவந்தன. பின்னர் இவை ஒன்றாகத் திரட்டப்பட்டு நற்சிந்தனை என்னும் பெயரில் நூலாக வெளியிடப்பட்டது. உள்ளத்தை உருக்கும் நற்சிந்தனைப் பாடல்கள் பல ஒலிப்பதிவு நாடாக்களாகவும் வெளிவந்துள்ளன. 1935ஆம் ஆண்டு சில பக்தர்களைக் கொண்டு சிவதொண்டன் என்னும் மாதாந்த சமய சஞ்சிகையை வெளிவருமாறு செய்தார். 1953ஆம் ஆண்டு சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் சிவதொண்டன் என்னும் ஆன்மீக நிலையத்தை நிறுவினார். சுவாமிகளின் விருப்பப்படி பின்னர் மட்டக்களப்பிலும் சிவதொண்டன் நிலையம் நிறுவப்பட்டது. சைவசமயத்தை மேலைத்தேசங்களில் பரப்புவது பற்றியும், கீழைத்தேசத்துக்கும் மேலைத்தேசத்திற்கும் இடையே ஒருபாலம் அமைப்பது குறித்தும் சிவயோக சுவாமிகள் அடிக்கடி கூறிவந்தார். இன்று மேலைத் தேசத்தில் சைவசமயம் மேலோங்கி வேரூன்றி நிற்பதற்கு வித்திட்டவர் சிவயோக சுவாமிகள். அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக யாழ்ப்பாணத்திலே தனிப்பெரும் முனிவராக அருளாட்சி புரிந்து வந்த சிவயோக சுவாமிகள் 1964ஆம் ஆண்டு பங்குனி மாத ஆயிலிய நட்சத்திரத்தில் தனது 91ஆவது வயதில் மகாசமாதி அடைந்தார்.

**சிவயோக சுவாமிகளின் அருட்தீட்சை பெற்ற துறவுச் சீடர்கள்.**

**மார்க்கண்டு சுவாமிகள்**

சிவயோக சுவாமிகளது அருட்தீட்சை பெற்ற துறவுச் சீடர்களுள் ஒருவரான மார்க்கண்டு சுவாமிகள் யாழ்ப்பாணத்திலுள்ள பிரான்பற்று கிராமத்தில் 1899 ஜனவரி மாதம் 29ஆம் திகதி பிறந்தார். தனது பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து நிலஅளவைத் திணைக்களத்தில் பணியாற்றினார்.

இவர் இளமைப் பருவம் தொடக்கம் ஆன்மீகத்தில் நாட்டம் உடையவராகத் திகழ்ந்ததுடன், சிவயோக சுவாமிகள் மீது மிகுந்த பக்தியும் கொண்டிருந்தார். இவர் சிவயோக சுவாமிகளின் ஆணைப்படி தனது ஐம்பதாவது வயதில் வேலையிலிருந்து விலகி, ஏற்கனவே சிவயோக சுவாமிகளின் அடியவர் ஒருவரால் இவருக்காகவே கைதடியில் அமைக்கப்பட்டிருந்த ஆச்சிரமத்தில் தங்க வைக்கப்பட்டார். மார்க்கண்டு சுவாமிகள் தன் எஞ்சிய வாழ்நாளை கைதடி ஆச்சிரமத்தில் கழித்தார்.

சிவயோக சுவாமிகள் இடையிடையே கைதடி ஆச்சிரமத்திற்குச் சென்று மார்க்கண்டு சுவாமிகளது தவ வாழ்க்கையை நெறிப்படுத்தி வந்தார். சிவயோக சுவாமிகளது அருள் வாக்கியங்களான "தன்னைஅறி" (Know thy Self), "சும்மா இரு" (Be still or just be) என்ற ஆத்ம சாதனையில் தன்னை முழுமையாக மூழ்கடித்துக் கொண்டார்.

சிவயோக சுவாமிகள் மகா சமாதியடைந்த பின்னர் அடியார் கூட்டம் மார்க்கண்டு சுவாமிகளின் கைதடி ஆச்சிரமத்திற்கு செல்லத் தொடங்கியது. தன்னை நாடி வரும் அடியவர்களுக்கு மார்க்கண்டு சுவாமிகள், தனது குருநாதன் அருளிய நற்சிந்தனைப் பாடல்களையும் வாசகங்களையும் மட்டுமே கூறுவார். வேறு ஒன்றும் சொல்வதில்லை. தன்னை அறிந்த ஒரு ஞானியாகவும் சிவயோக சுவாமிகளின் துறவுச் சீடராகவும் கைதடி ஆச்சிரமத்திலிருந்து ஞானஒளி பரப்பினார். செங்கலடி சிவதொண்டன் நிலையத்தில் சிவதொண்டு புரிந்து வந்த சாந்த சுவாமிகள், மார்க்கண்டு சுவாமிகளின் இறுதிக் காலத்தில் கைதடி ஆச்சிரமத்திற்கு வருகைதந்து, சுவாமிகளுடன் தங்கியிருந்து ஆத்மசாதனை செய்தார்.

எனது குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் அருள் ஆணைப்படி, 1982ஆம் ஆண்டு தொடக்கம் மார்க்கண்டு சுவாமிகள் சமாதியடையும் வரை, ஒவ்வொரு வாரமும் சுவாமிகளைத் கைதடி ஆச்சிரமம் சென்று தரிசித்து வந்தேன். சுவாமிகளின் மகா சமாதி கிரியைகளில் கலந்து கொண்டமை என் வாழ்நாளில் கிடைத்த பெரும்பேறு.

மார்க்கண்டு சுவாமிகள் 1984ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி கார்த்திகை நட்சத்திரத்தில் மகாசமாதியடைந்தார்.

**குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள்.**

சிவயோக சுவாமிகளின் அருட்தீட்சை பெற்ற பிரதான துறவுச் சீடர்களுள் ஒருவராகிய சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளே அடியேனின் குருதேவர். பிறப்பால் அமெரிக்கரான இவர் 1927ஆம் ஆண்டு தை மாதம் 5ஆம் திகதி கலிபோர்னியாவில் பிறந்தார். இளம் வயதிலேயே ஆன்மீக தாகம் கொண்ட இவர் கீழைத்தேசம் நோக்கிவந்தார். அக்காலத்தில் அளவெட்டி கிராமத்தில் வாழ்ந்த கந்தையா செட்டியார் என்ற சிவயோக சுவாமிகளின் அடியவர் 1949ஆம் ஆண்டு வைகாசி பூரணை தினத்தன்று அந்த இளைஞனை கொழும்புத் துறையில் உள்ள சிவயோக சுவாமிகளின் ஆச்சிரமத்திற்கு அழைத்து வந்தார். அவரின் வருகையை எதிர் பார்த்திருந்த சிவயோக சுவாமிகள் அவருக்கு சுப்பிரமுனிய சுவாமிகள் எனும் நாமதீட்சை அளித்தார். சிவயோக சுவாமிகள் குருதேவருக்கு பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசம் செய்து அவரின் வாழ்வின் பணிகள் குறித்து அறிவுரைகளையும் வழங்கினார். சிவயோக சுவாமிகள் குருதேவரின் முதுகிலே பலமாக ஓங்கிஅடித்து "இந்த அடி அமெரிக்காவிலே கேட்கும்! இனி உலகெங்கும் சென்றுசிங்கம் போல் கர்ச்சிப்பாய். நீ பல ஆலயங்கள் அமைத்து பலருக்கு உணவளிப்பாய்" என்று ஆசி வழங்கினார். இந்த அடி குருதேவரை நாதர் சித்தர் மரபில் சேர்க்கும் தீட்சையாக

அமைந்தது. யாழ்ப்பாண மக்கள் இந்த அரிய நிகழ்ச்சியை ஒரு முடிசூட்டு விழா என்று கூறி மகிழ்ந்தனர். அப்போது குருதேவருக்கு வயதோ இருபத்தியிரண்டு, சிவயோக சுவாமிகளுக்கோ எழுபத்தியேழு.

சுப்பிரமுனிய சுவாமிகள் இலங்கையில் இருந்த காலத்தில் சிவயோக சுவாமிகளின் ஆசியுடன் அளவெட்டி எனும் கிராமத்தில் ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தை நிறுவினார். இன்று உலகளாவிய ரீதியில் சேவையாற்றி வரும் சைவசித்தாந்த தர்ம சபை இங்கு தான் ஆரம்பமாகியது. சிவயோக சுவாமிகளின் ஆணைப்படி குருதேவர் அமெரிக்காவுக்கு திரும்பிவந்து ஏழு ஆண்டுகள் தாம் செய்ய வேண்டிய பணிகளுக்கு தன்னை ஆயத்தமாக்கும் சாதனைகளில் ஈடுபட்டார். தினசரி சாதனையாலும் ஆழ்ந்த தியானத்தாலும் ஞானதிருஷ்டி, ஞானதரிசனம் ஆகிய அக ஆற்றல்கள் குரு தேவருக்கு வெளிப்பட்டன. 1957 ஆம் ஆண்டு தனது முப்பதாவது வயதில் சுப்பிரமுனிய சுவாமிகள் கலிபோர்னியாவில் இமாலய கலாபீடத்தை நிறுவி அமெரிக்காவின் முதலாவது இந்துக் கோயிலையும் ஸ்தாபித்தார். கீழைத்தேசத்துக்கும் மேலைத் தேசத்துக்கும் இடையில் மையமாக விளங்கும் ஹவாய் தீவுகளில் ஒன்றான குவை என்னும் தீவில் புனித வைலுவ நதிக்கரையில் 1970 ஆம் ஆண்டு 459 ஏக்கர் நிலப்பரப்பில் குருதேவர் குவை சைவ ஆதீனத்தை நிறுவினார். இங்கு ஆறடி உயரமான சிவநடராஜரை மூலமூர்த்தியாகக் கொண்ட கோயிலை ஸ்தாபித்தார். இதுவே மேலைத்தேசத்தில் அமைந்த முதலாவது சிவன் கோயிலாகும். 16 தொன் எடையுள்ள பெரிய நந்தியை உடைய இக் கோயிலின் எட்டுக் காலப் பூசைகளையும் ஆதீனத்துத் துறவிகள் செய்து வருகின்றனர்.

குருதேவருக்கு 1975 ஆம் ஆண்டு மாசி மாதம் சிவபெருமான் ஓர் அகக்காட்சி அருளினார். இந்த அகக் காட்சியின் படி புனித வைலுவ நதிக்கரையில் குருதேவர் ஒரு சுயம்பு லிங்கத்தைக் கண்டார். இச்

சுயம்புலிங்கத்தை மையமாகக் கொண்டே சன்மார்க்க இறைவன் கோயில் உருவாகி வருகின்றது. சன்மார்க்க இறைவன் கோயில் நுழைவாயிலில் ஓர் உருத்திராட்ச மரச்சோலை. இச்சோலையில் இருந்து கோயிலுக்கு இரு மருங்கிலும் கொன்றை மரங்களையுடைய ஒரு நீண்ட நேரிய பாதை, இதுவே சன்மார்க்கம். இப்பாதையில் ஓர் ஆலமர நிழலில் விநாயகப் பெருமான் எழுந்தருளி உள்ளார். அவரிடம் விடைபெற்றுச் செல்லும் போது வழியில் ஒரு குன்றின் மேல் முருகப்பெருமான் தரிசனம் தருகின்றார். அவரையும் தரிசித்து நேரே சென்றால் சுயம்பு லிங்கேஸ்வரரை நாம் அடையலாம். நூற்றியெட்டு வில்வ மரங்களுக்கு மத்தியில் வீற்றிருக்கும் இந்த சுயம்புலிங் கேஸ்வரருக்கு 1975ஆம் ஆண்டு முதல் நித்திய பூஜைகள் நடைபெற்று வருகின்றன. இறைவன் கோயிலில் பிரதிஷ்டை செய்யவென ஒரு ஸ்படிகலிங்கம் குருதேவருக்கு 1987 ஆம் ஆண்டு ஆவணி மாதம் கிடைக்கப் பெற்றது. இது ஆறு கோணங்களை யுடைய 700 இறாத்தல் எடையும் 39 அங்குல உயரமும் கொண்ட அற்புதமான உலகின் மிகப் பெரிய ஸ்படிகலிங்கமாகும். இறைவன் கோயில் முற்றிலும் கருங்கற்களினால் ஆகம விதிப்படி அமைந்த கோயிலாக பல தலைமுறைகளுக்கு நிலைத்து நிற்கக் கூடிய வகையில் உருவாகி வருகின்றது.

1979 ஆம் ஆண்டு குருதேவர் HINDUSIAM TODAY என்னும் சஞ்சிகையை ஆரம்பித்தார். இந்தச் சஞ்சிகை உலகெங்கும் வாழும் இந்துக்களின் குரலாக சர்வதே சரீதியில் ஒலிக்கின்றது. இந்துசமயம் பற்றிய பல நூல்களையும் குருதேவர் எழுதியுள்ளார். இன்று இவை பலமொழிகளில் எமக்கு கிடைக்கின்றது. இந்தத் தொழில்நுட்ப யுகத்தில் குருதேவரின் துறவிகள் அதி நவீன கொம்பியூட்டர்களின் துணையுடன் பலநூல்களையும் பிரசுரங்களையும் வெளியிட்டு வருகின்றனர். அமெரிக்காவிலும், மேலைத் தேசங்களிலும் பல இந்துக் கோயில்கள் உருவாக குருதேவர்

மூலகாரணமாக இருந்துள்ளார். உலகெங்கும் கோயில்களைக் கட்டிவரும் இந்து சமூகத்தினருக்கு ஆலோசனைகளை வழங்கியும், அவர்களின் கோயில்களுக்கு மூர்த்திகளை வழங்கியும், இடையிடையே இந்தக் கோயில்களுக்கு நேரில் சென்றும் குருதேவர் அவர்களை வழிநடத்தி வந்தார்.

1982 ஆம் ஆண்டு சுப்பிரமுனிய சுவாமிகள் கோப்பாயில் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்தை நிறுவினார். 1983 இல் இலங்கையில் நடைபெற்ற இனக் கலவரத்தின் பின் சுவாமிகள் 'இலங்கைத் தமிழர் அகதி நிவாரணநிதி' என ஒரு நிதியத்தை உருவாக்கி அதன் மூலம் ஆயிரக்கணக்கான பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கியுள்ளார். 'இந்து கலாசார அறக்கட்டளை' என்னும் ஒரு ஸ்தாபனத்தை உருவாக்கி அதன் மூலம் சிறுவர், முதியோர் இல்லங்கள், சமய ஸ்தாபனங்கள் போன்றவற்றுக்கு உதவி வந்துள்ளார். 1986 இல் புதுடில்லியில் கூடிய உலக சமய பாராளுமன்றம் குருதேவரின் உலகளாவிய சமயப்பணியைப் பாராட்டி அவருக்கு 'ஜகதாச்சாரியர்' என்ற விருதினை வழங்கிக் கௌரவித்தது. ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் உயர் திரு ஊத்தான் அவர்களின் ஞாபகார்த்தமாக வருடாந்தம் வழங்கப்படும் சமாதானப் பரிசு 2000 இல் சுப்பிரமுனிய சுவாமிகளுக்கு வழங்கப்பட்டது. இத்தருணம் ஐக்கியநாடுகள் சபையின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற உலக சமாதான மகாநாட்டிலும் குருதேவர் கலந்துகொண்டு உரையாற்றினார்.

குருதேவர் 12.11.2001 திங்கட்கிழமை நள்ளிரவு 11-54 மணிக்கு சித்திரை நட்சத்திரத்தில் ஹவாயில் உள்ள தனது சைவ ஆதீனத்தில் துறவிகள் சூழ்ந்திருக்க மகாசமாதி அடைந்தார். குருதேவரின் திருமேனி தகனம் செய்யப்பட்டு அஸ்தி ஆதீனத்தில் உள்ள சிவநடராஜரின் சன்னிதியின் கீழே ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த குகையில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

மகாசமாதியடையும் போது தனது அடியவர்களிடம் குருதேவர் தான் இந்த உடலை விட்டு நீங்கினாலும் தினமும் இருபத்து நான்கு மணிநேரமும் அகவுலகிலிருந்து அடியவர்களுக்கு அருள் பாலிப்பேன் என்று கூறினார். குருதேவர் ஆரம்பித்த சிவப்பணிகளை ஆதீனத்துத் துறவிகள், தற்போதைய ஆதீனகுரு முதல்வர் சற்குரு போதிநாதவேலன் சுவாமிகளின் தலைமையில் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

குருதேவர் சுப்பிரமுனிய சுவாமிகளின் திருவடியின் கீழ் ஹவாய் சைவஆதீனத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்தமை எனது வாழ்வில் கிடைத்த பெரும்பேறு. எனது ஆன்மீக வாழ்வை ஆற்றுப்படுத்திய குருதேவர் சுப்பிரமுனிய சுவாமிகள் மகா சமாதியடையும் போது அவரது அருகில் இருந்தமை எனது பூர்வஜென்ம புண்ணியமும், மாதா பிதா குரு தெய்வம் ஆகியோரின் கருணையுமாகும்.

**சாந்த சுவாமிகள்**

சிவயோக சுவாமிகளின் அருட்தீட்சை பெற்ற துறவிச் சீடர்களுள் மற்றொருவர் சாந்த சுவாமிகள். இவர் ஜேம்ஸ்ராம்ஸ்போதம் என்ற இயற்பெயர் கொண்ட இவர் இங்கிலாந்து நாட்டிலே கௌரவமான பிரபுக் குடும்பத்தில் பிறந்தவர். இலங்கையின் இறுதி தேசாதிபதியாக பணியாற்றிய சோல்பரிப் பிரபுவின் புதல்வர். இளமையில் நல்லொழுக்க சீலமுடைய கிறிஸ்தவனாக வளர்ந்தார். இவர் ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் தத்துவ ஞானத்துறையில் சேர்ந்து சிரத்தையுடன் படித்தார். இவருக்கு இளவயதில் இருந்தே ஆன்மீகத்தில் நாட்டம் இருந்தது.

இவரது மனைவியாரின் மறைவுக்குப் பின் ஆன்மீகத் தேடலில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். இந்தியாவுக்குச் சென்று பின் இவரது தந்தையார் இங்கிலாந்து அரசின் ஆளுநராக

இலங்கையில் இருந்தபோது புதல்வர் ராம்ஸ்போதம் அவர்களும் இலங்கை வந்தார். இவர் இலங்கையில் பௌத்தமடங்கள் மற்றும் கதிர்காமம் ஆலயத்திற்குச் சென்று பின் கொழும்புத்துறைக்கு சிவயோக சுவாமிகளை தரிசிக்க வந்தார். அவரை அழைத்து வந்த நரிக்குட்டி சுவாமிகளும், கௌரிபாலா சுவாமிகளும் சிவயோக சுவாமிகளுக்கு "கவர்னர் ஜெனரலின் மகன்" என அறிமுகம் செய்தனர். சிவயோக சுவாமிகள் "உனது கவர்னரும் நானே ஜெனரலும் நானே" எனக்கூறி அவரைத் தம் ஞானப்புதல்வராக அரவணைத்தார். 1963ஆம் ஆண்டு மார்கழி திருவாதிரை நட்சத்திரத்தில் தனது கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் வைத்து சிவயோக சுவாமிகள் சாந்த சுவாமிகளுக்கு ஞானதீட்சை அருளினார்.

கொழும்புத்துறை ஆச்சிரமத்திலும், சிவதொண்டன் நிலையத்திலும், மார்க்கண்டு சுவாமிகள் வாழ்ந்த கைதடி ஆச்சிரமத்திலும் வைத்து சிவயோக சுவாமிகள் அவருக்கு ஆன்மீகப் பயிற்சி அளித்தார்.

சாந்த சுவாமிகள் தொண்டினைப் பிரதான அங்கமாகக் கொண்ட சமய மரபிலே வளர்ந்தவர். அவருக்குச் சேவை செய்யும் ஆசை இருந்தது. அதன் பொருட்டுக் குருவருள் அவரை செங்கலடி சிவதொண்டன் நிலையத்தில் குடியிருத்தியது. அவர் பன்னிரு வருடகாலம் அங்கிருந்து சிவதொண்டும், சிவத்தியானமும் செய்தார். இந்நாட்களிலே நற்சிந்தனை ஆங்கிலநூல் உருப் பெறுவதில் அவர் அரும்பணி புரிந்தார். சிவயோக சுவாமிகள் தமக்கு ஆங்கிலத்தில் சொன்ன அருள் மொழிகளுடன் மற்றைய அணுக்கத் தொண்டர்களுக்கு அருளிய அமுதமொழிகளையும் மொழிபெயர்த்து Words of our Master எனும் நூலாக ஆக்கி அளித்தார். பிற்காலத்தில் அவர் கைதடிக்கு வந்து, மார்க்கண்டு சுவாமிகளுடன் இணைந்து ஆத்ம சாதனை செய்தார். சாந்த

சுவாமிகள் கைதடி ஆச்சிரமத்தில் வாழ்ந்த காலத்தில் அவரை பல தடவைகள் சென்று தரிசிக்கும் பாக்கியம் அடியேனுக்கு கிடைத்தாலும், ஒரு நாள் தான் சாந்த சுவாமிகளுடன் உரையாடும் பேறுபெற்றேன். சில காலத்தின் பின் இங்கிலாந்து திரும்பிய சாந்தசுவாமிகள் Words of our Master எனும் நூலிலிருந்து திரட்டிய கருத்துக்களை உள்ளடக்கி Positive Thoughts for Daily Meditation என்னும் நூலை எழுதினார்.

சாந்த சுவாமிகள் 2004ஆம் டிசெம்பர் மாதம் பன்னிரண்டாம் திகதி லண்டனில் மகாசமாதியடைந்தார்.

**சிவயோக சுவாமிகளின் அருள்பெற்ற சீடர்கள்.**

**செல்லத்துரை சுவாமிகள்**

சிவயோக சுவாமிகளின் இன்னுமொரு சீடரான செல்லத்துரை சுவாமிகள் 1914ஆம் ஆண்டு சித்திரை மாதம் 7ஆம் திகதி சரசாலை எனும் கிராமத்தில் பிறந்தார். தனது உயர்கல்விப் படிப்பை முடித்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்று தனது இருபத்தியாறாவது வயதில் ஆசிரியராக பணியாற்றத் தொடங்கினார். ஆன்மீக நாட்டம் கொண்ட அவர் பிரம்மச்சரிய வாழ்க்கையை மேற்கொண்டார். பாடசாலை விடுமுறை நாட்களில் கதிர்காமம், செல்வச் சந்நிதி, நல்லூர் போன்ற ஆலயங்களுக்கு தவறாது சென்று வருவது வழக்கம்.

1940ஆம் ஆண்டுகளில் இவர் கொழும்பில் ஆசிரியராகப் பணியாற்றிய காலப்பகுதியில் சிவயோக சுவாமிகளை முதன் முறையாக தரிசித்தார். ஆண்டு தோறும் மார்கழி விடுமுறை காலத்தில் இவர் தென்னிந்திய திருத்தலயாத்திரை செல்வது வழக்கம். தலயாத்திரையின் போது திருவண்ணாமலை ரமண ஆச்சிரமத்தில் கூடிய தவப்பொழுதினைக் கழித்தார். 1957ஆம்

ஆண்டு தென்னிந்திய திருத்தலயாத்திரையை நிறைவு செய்து கொண்டு வடஇந்தியா நோக்கி யாத்திரை செய்தார். அவருடன் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களும் இணைந்து கொண்டார். இருவரும் திருக்கேதாரநாத்தில் ஓர் அறை எடுத்து தங்கி இருந்தனர். அந்த அறையில் செல்லத்துரை சுவாமிகளின் முன் சிவயோக சுவாமிகள் நேரடியாகத் தோன்றி Come Home immediately (வீட்டிற்கு உடனே வா) என ஆங்கிலத்தில் கூறினார். மீண்டும் இலங்கை வந்து சிவயோக சுவாமிகளை தரிசித்தார். சிவயோக சுவாமிகள் "சிவ தொண்டனுக்கு நல்ல ஆள்" என உடன் இருந்தவர்களுக்கு கூறினார்.

சிவயோக சுவாமிகள், தன்னால் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட சிவதொண்டன் நிலையத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஒப்படைத்தார். தனது நாற்பதாவது வயதில் சிவதொண்டன் நிலையத்தில் இணைந்த செல்லத்துரை சுவாமிகள் அடிக்கடி கொழும்புத்துறை ஆச்சிரமத்திற்குச் சென்று சிவயோக சுவாமிகளின் தரிசனத்தை பெற்றுள்ளார். சாந்த சுவாமிகள் மட்டக்களப்பு செங்கலடி சிவதொண்டன் நிலையத்தில் தனது பணிகளை நிறைவு செய்து கொண்டு கைதடி ஆச்சிரமத்திற்கு வந்து தனது தவ வாழ்க்கையை தொடர்ந்த போது செல்லத்துரை சுவாமிகள் செங்கலடி சிவதொண்டன் நிலையத்தை பொறுப்பேற்று அங்கிருந்து பணியாற்றினார். பிற்காலத்தில் சுவாமிகள் மீண்டும் சிவதொண்டன் நிலையத்திற்கு வந்து தனது தவவாழ்வை தொடர்ந்ததோடு அடியவர்களையும் ஆற்றுப்படுத்தி வந்தார். 2006ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் திகதி பங்குனி உத்தர நட்சத்திரத்தில் சுவாமிகள் சமாதியடைந்தார்.

**ஜேர்மன் சுவாமிகள்**

சிவயோக சுவாமிகளின் அருள்பெற்ற ஞானிகளுள் ஒருவராகப் போற்றப் படும் ஜேர்மன் சுவாமிகள் 1907 ஆம் ஆண்டில் ஜேர்மனிய

நாட்டில் பிறந்தார். இவரது இயற்பெயர் பீற்றர் என்பதாகும். இவர் இளம் வயதிலேயே ஆன்மீகதாகம் கொண்டவராக விளங்கினார். இந்துமதம் தொடர்பான விடயங்களை அறிந்து கொள்ளவேண்டும் என்பதில் பெருவிருப்புடையவராக இருந்தார். இதன் காரணமாக 1930 ஆம் ஆண்டு 23 ஆவது வயதில் இந்தியப் பிரயாணத்தை மேற்கொண்டார்.

இந்தியாவில் உள்ள பல தலங்களுக்கும் யாத்திரை செய்தார். பல ஞானிகளையும் குருமார்களையும் சந்தித்து தரிசிக்கக் கூடிய வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. இந்தியாவில் பல இடங்களுக்குச் சென்றிருந்தும் பலரை சந்தித்திருந்தும் திருப்தியடையாத பீற்றர் பின்னர் இலங்கையை வந்தடைந்தார். ஆரம்பத்தில் தென்னிலங்கையில் வாழ்ந்து வந்த ஜேர்மனிய நாட்டைச் சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவருடன் இணைந்து கொண்டு பௌத்த மதத்தை பற்றிய விடயங்களைக் கற்றுக் கொண்டார்.

ஜேர்மனிய நாட்டைச் சேர்ந்த பீற்றர் பௌத்த சமயத்தைப் பற்றி கற்றறிந்த போதிலும் அதிலும் திருப்தியடையாத நிலையில் மீண்டும் இந்து சமயத்தை நாடினார். இந்த வேளையில் இலங்கையில் இருந்து கொண்டே பல தடவைகள் இந்திய யாத்திரையை மேற்கொண்டு வந்தார். அப்போது வட இந்தியாவில் இந்து சமயகுருபீடம் ஒன்றினால் பீற்றருக்கு கௌரிபாலாகிரி என்னும் தீட்சா நாமம் வழங்கப்பட்டது.

ஆன்மீக ரீதியாக ஓர் உயர்நிலையை பெற்றுக் கொண்ட ஜேர்மனியரான பீற்றர் எனப்படும் கௌரிபாலாகிரி அவர்களை மக்கள் ஜேர்மன் சுவாமிகள் என அழைக்கலாயினர். இந்த நிலையிலும் ஒரு குருவை அடைந்து அவர் வழி செல்ல வேண்டும் என்று அவருக்கு ஏற்பட்ட ஆன்மீகத் தாகம் தீரவில்லை. இவர் விரும்பியது போலவே அவரது ஞான வாழ்க்கையில் பெரியதொரு

மாற்றத்தினை ஏற்படுத்திய நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

ஒருநாள் யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா புத்தகசாலையில் ஜேர்மன் சுவாமிகள் நூல்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அவர் பின்னால் நின்றிருந்த நரைத்த சடை முடியும் தாடியும் கொண்ட முதியவர் ஒருவர் ஜேர்மன் சுவாமிகளின் கையிலிருந்த நூல்களைப் பறித்தெடுத்து "அட முட்டாளே! நீதேடும் விடயம் புத்தகத்தில் இல்லை" எனக் கூறி "சும்மா இரு" (Be still or just be) என்ற வேத வாக்கியத்தை அருளினார். அந்த முதியவர் தான் யாழ்ப்பாணத்து மாமுனிவரான சிவயோக சுவாமிகள். இவருக்கும் ஜேர்மன் சுவாமிகளுக்கும் இடையிலான முதல் சந்திப்பு இதுதான். பல ஆண்டுகளாக தான் தேடிய குருவை பெற்றுக் கொண்ட திருப்தியுடன் சிவயோக சுவாமிகள் அவருக்கு அருளிய "சும்மா இரு" (Be still or just be) என்ற வேதவாக்கியத்தில் திழைத்து வாழ்ந்தார் ஜேர்மன் சுவாமிகள். சும்மா இரு என்ற வாக்கியத்தை தனது கையில் பச்சைகுத்தி அதன் மூலம் ஆத்ம திருப்தியடைந்தார்.

சிவயோக சுவாமிகளால் அருளப்பெற்ற "சும்மா இரு" (Be still or just be) என்ற வாசகத்தின் அர்த்தத்தினை பல சித்தர்களினது நூல்களை வாசித்து ஆராய்ந்து வெளிப்படுத்துவதில் ஜேர்மன் சுவாமிகள் பெரிதும் ஈடுபட்டு அதனைத் தம் வாழ்நாள் சேவையாகக் கொண்டிருந்தார்.

ஜேர்மன் சுவாமிகள் கதிர்காமத் திருத்தலத்தின் மீது ஈர்ப்புக் கொண்டு பலஆண்டுகள் கதிர்காமத்திலும் தங்கியிருந்துள்ளார். அதன் பின் தனது வாழ்நாளின் இறுதிக்காலத்தில் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய சுற்றாடலில் ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்து வந்தார். அக் காலத்தில் சுவாமிகளை தரிசிக்கும் பாக்கியம் அடியேனுக்கு கிடைத்தது. அவ்வேளையில் கதிர்காமத்துக்கு பாதயாத்திரை மேற்கொண்டும் வந்துள்ளார்.

இவர் 1984 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதியன்று மகா சமாதியடைந்தார்.

**நரிக்குட்டி சுவாமிகள்**

சிவயோக சுவாமிகளின் அருள் பெற்ற ஞானிகள் வரிசையில் இன்னொருவர் தான் நரிக்குட்டி சுவாமிகள். 1930ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அவுஸ்திரேலியா நாட்டில் பிறந்த இவரது இயற்பெயர் வரி ஒவன் வின்சர் (Varry Owen Winsor) என்பதாகும். சிறுவயதிலேயே தாயாரை இழந்து வாழ்ந்தமையால் வாழ்க்கையின் நிலையில்லாத தன்மையைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினார். இவர் பத்தொன்பது வயது இளைஞராக இருந்த வேளையில் கட்டடக் கலைத்துறைப் படிப்பை மேற்கொண்டார்.

அப்போது வின்சரின் ஆசிரியராக இருந்த ஒருவர் வேதாந்த தத்துவ உண்மைகளையும் கீழைத்தேச கலாசார நடைமுறைகள் பற்றியும் இவருக்கு போதித்து வந்தார். அதேவேளையில் இலங்கையின் பேரறிஞரான கலாயோகி ஆனந்தகுமாரசாமி அவர்களது நூல்களை வாசித்து அவற்றிலுள்ள விடயங்களையும் ஆழமாகக் கற்றறிந்து கொண்டார்.

வின்சர் 1950ஆம் ஆண்டில் முதன் முதலாக இலங்கைக்கு விஜயம் மேற் கொண்டார். அப்போது கதிர்காமம் சென்றபோது அங்கு தங்கியிருந்த ஜேர்மன் சுவாமிகள் என அழைக்கப்பட்ட சுவாமி கௌரிபாலாகிரி அவர்களை சந்தித்தார். ஜேர்மன் சுவாமிகளுடன் தங்கியிருந்து அவருக்கு பணிவிடை செய்து வந்த மூதாட்டி ஒருவர் வின்சரை அன்புடன் “குட்டி” என அழைத்து வந்தார். காலப் போக்கில் இப்பெயர் மாற்றமடைந்து “நரிக்குட்டி சுவாமி” என எல்லோராலும் அழைக்கப்படலாயிற்று.

நரிக்குட்டி சுவாமிகள் கதிர்காமத்தில் தங்கியிருந்த வேளையில் ஜேர்மன் சுவாமிகள் ஊடாக சிவயோக சுவாமிகளைப் பற்றி அறிந்து கொண்டார். அவுஸ்திரேலியாவிலிருந்து தனது குடும்பத்தின ருடனான பூர்வீகத் தொடர்புகளை முற்றாகத் துண்டித்துக் கொண்ட நிலையில் ஒருநாள் சிவயோக சுவாமிகளை தரிசிப்பதற்காக யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார்.

சிவயோக சுவாமிகள் இவரை சந்திக்காத நிலையில் போகும்படி சொல்லிவிட்டார். இவ்வாறு பல தடவைகள் இவரைக் கலைத்த போதும் அடிக்கடி சிவயோக சுவாமிகள் அருகே வந்து அவரை தரிசித்து வந்தார். சிவயோக சுவாமிகளின் போதனைகளில் மூழ்கிய நரிக்குட்டி சுவாமிகள் திரிகரண சுத்தியை பேணியதோடு சிவயோக சுவாமிகள் போதித்த மௌன நிலையைக் கையாண்டார். தமிழ்மொழியை ஆழமாகப் படித்த நரிக்குட்டி சுவாமிகள் அதில் பாண்டித்தியமும் பெற்றார். சிவயோக சுவாமிகளை தனது குருவாகவும் பெற்றுக் கொண்டார்.

தனது குருநாதரான சிவயோக சுவாமிகள் மகா சமாதியடைந்த பின்னரும் சிலகாலம் இலங்கையில் வாழ்ந்த நரிக்குட்டி சுவாமிகள் 1966ஆம் ஆண்டு இந்தியா சென்று அங்குள்ள புண்ணிய தலங்களுக்கு பாதயாத்திரை மேற்கொண்டு வந்தார். இறுதியாக திருவண்ணாமலையால் ஈர்க்கப்பட்ட அவர் 1970ஆம் ஆண்டு திருவண்ணாமலையில் தனது வசிப்பிடத்தை அமைத்துக் கொண்டார்.

திருவண்ணாமலையிலிருந்து தனது தவ வாழ்க்கையை மேற்கொண்டு வந்த நரிக்குட்டி சுவாமிகள் 1994ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் மகா சமாதியடைந்தார்.

**சந்திரபாலா சுவாமிகள்**

சிவயோக சுவாமிகளின் அருள்பெற்ற ஞானிகளுள் சந்திரபாலா சுவாமிகளும் ஒருவராவர். இவரது இயற்பெயர் கலாநிதி சேர்ஜியோறேனட் டீலாபெரீரர் (Dr. Sergio Raynaud dela Ferrierr) என்பதாகும். இவர் 1916 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ஆம் திகதி பிரான்ஸ் நாட்டில் பிறந்தார். கல்வியறிவு மேம்பட்ட குடும்பத்தில் பிறந்த கலாநிதி சேர்ஜியோ தனது சொந்த நாட்டில் பல சமூக நல ஸ்தாபனங்களை உருவாக்கியிருப்பதுடன் ஐக்கிய நாடுகள் சபையின் ஊடாகவும் பலசேவை நிறுவனங்களை ஸ்தாபித்து பெரும்பணி ஆற்றியிருக்கிறார். ஆன்மீக விடயங்களில் நாட்டம் கொண்ட கலாநிதி சேர்ஜியோ 1950ஆம் ஆண்டு ஞான மார்க்கப் பயணமாக இந்தியா சென்று அங்கு நடந்த கும்பமேளா நிகழ்வில் கலந்து கொண்டார். அதனைத் தொடர்ந்து இலங்கைக்கு வருகை தந்த அவர் யாழ்ப்பாணத்திற்கும் வந்திருந்தார். அப்போது இங்கிருந்த கலைப்புலவர் நவரத்தினம் என்ற பிரபல கல்விமானை சந்திக்க நேர்ந்தது. இவர் தத்துவஞானி கலாநிதி சேர்ஜியோ அவர்களை சிவயோக சுவாமிகளுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

சிவயோக சுவாமிகளின் ஞானோபதேசங்களைக் கேட்ட சேர்ஜியோ அவர்களுக்கு சுவாமிகள் மீது பற்றுணர்வை ஏற்படுத்தியது. அது வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை தோற்றுவிப்பதற்கும் காரணமாக அமைந்துவிட்டது. அவர் உலக வாழ்க்கையை துறந்து தெய்வீகப் பணியாளரானார். அந்த பிரான்சிய தத்துவஞானிக்கு சிவயோக சுவாமிகள் ஆசிவழங்கி ‘சந்திரபாலா’ என்ற நாமாகரணமும் சூட்டி வைத்தார்.

நாடு திரும்பிய இவர் சந்திரபாலா சுவாமிகளாகப் போற்றப்பட்டார். தென் அமெரிக்காவின் வெனிஸ்வேலா நகரத்தில் தலைமைய கத்தைக் கொண்ட ஒரு ஞான இயக்கத்தினை சந்திரபாலா சுவாமிகள் தொடக்கி வைத்தார். சர்வமகா சகோதரத்துவம்

(Universal Great Brotherhood) என்ற பெயரிலான அந்த ஞான இயக்கத்தின் பிரதான நிலையங்கள் தென் அமெரிக்காவில் அமைந்துள்ளன. சந்திரபாலா சுவாமிகளின் பெருமளவு பக்தர்கள் ஸ்பானியமொழி பேசுபவர்களாக இருந்திருக்கிறார்கள்.

சந்திரபாலா சுவாமிகள் தென் அமெரிக்கா முதலான உலக நாடுகளில் பல சீடர்களை தோற்றுவித்திருக்கிறார். அங்கெல்லாம் சமூக சேவைகளுடன் யோகாசனம், தியானம் போன்றவைகளிலும் ஈடுபட்டு இருந்ததுடன் ஏனையோரையும் அதில் பங்குகொள்ள வைத்தவர். இதனூடாக மனித மேம்பாட்டுக்கு பெரிதும் உழைத்து வந்தவர்.

தென் அமெரிக்காவிலுள்ள பேரு நாட்டின் தலைநகரான லிமாவில் சந்திரபாலா சுவாமிகளின் பிரசார நிலையங்கள் பல இயங்கி வருகின்றன. 2007ஆம் ஆண்டு அடியேன் பேரு நாட்டுக்குச் சென்று சுவாமிகளின் யோக நிலையங்களில் நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்டேன். சிவயோக சுவாமிகளது அருள்பெற்ற ஞானியான சந்திரபாலா சுவாமிகள் 1962ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 27ஆம் திகதியன்று மகாசமாதி அடைந்தார்.

சந்திரபாலா சுவாமிகளின் மறைவுக்குப் பின்னரும் சுவாமிகளது சீடர்கள் அவரது பணியை முன்னெடுத்துச் செல்கின்றனர். சுவாமிகள் தொடக்கி வைத்த ஞான இயக்கம் மற்றும் ஆச்சிரமம் என்பன வெளிநாடுகளில் இப்போதும் இயங்கி வருகின்றன. இவற்றின் ஊடாக சிவயோக சுவாமிகளின் ஆன்மீகத் தாக்கம் அங்கெல்லாம் பரவி பெரும் வெற்றிகளை கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

**வடிவேல் சுவாமிகள்**

சிவயோக சுவாமிகளின் அருள்பெற்ற இன்னுமொருவர் வடிவேல் சுவாமிகள். இவர் யாழ். இணுவில் கிராமத்தில் 1906 மே 24ஆம் திகதி பிறந்தார். அக்காலத்தில் இணுவிலில் வாழ்ந்த பெரிய சந்நியாசியார் எனும் ஞானி இவருக்கு வடிவேல் எனபெயரிட்டார்.

வடிவேல் சுவாமிகள் சிறுவனாக இருக்கும் போது தந்தையார் அவரை சிவயோக சுவாமிகளிடம் அழைத்துச் சென்றார். "பள்ளிப் படிப்புடன் கந்தர்மடத்திலுள்ள வேதாந்தமடம் சென்று சமய சாஸ்திரம் படி" என்று சிவயோக சுவாமிகள் கட்டளையிட்டார். அப்போது வேதாந்த மடத்தின் குருமுதல்வராக இருந்த மகாதேவா சுவாமிகளிடம் வடிவேல் சுவாமிகள் சமய சாஸ்திரங்களைக் கற்றார். இளமையிலேயே பல ஆலயங்களுக்குச் சென்று சமயப் பிரசங்கங்களையும் செய்துவந்தார்.

சிவயோக சுவாமிகளின் வேண்டுகோளுக்கிணங்க கிளிநொச்சிக்குச் சென்று ஜெயந்தி நகரிலே தனது தீட்சா குருவை நினைவுகூர்ந்து மகாதேவா ஆச்சிரமத்தை நிறுவினார். இந்த ஆச்சிரமம் மூலமாக பல்லாண்டு காலம் வன்னி பெருநிலப்பரப்பில் ஆன்மீகத் தொண்டுகள் செய்து வந்தார்.

வடிவேல் சுவாமிகள் பெரும் புலவரும்கூட. உருத்திரபுரம் சிவன் ஆலயம், இரணைமடு கனகாம்பிகை அம்பாள் ஆலயம் ஆகியவற்றின் மீது பல பாடல்களைப் பாடியுள்ளார். இவ்வாறு வன்னி மண்ணில் ஞானஒளி பரப்பிய வடிவேல் சுவாமிகள் 1990 ஜுன் 26ஆம் திகதி சமாதியடைந்தார்.

**சிவயோக சுவாமிகளின் அடியவராகிய கனேடிய தூதுவர்.**

இலங்கைக்கான கனேடிய தூதுவராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற கலாநிதி ஜேம்ஸ் ஜோர்ஜ் என்பவர் சிவயோக சுவாமிகளை

பலமுறை சந்தித்து ஆசி பெற்றதாகவும், 90 வயதை கடந்த நிலையில் கனடா டொரன்டோ நகரில் வாழ்ந்துவரும் அவர் 2007ஆம் ஆண்டில் நூலொன்றை எழுதியிருப்பதாகவும், அதில் ஓர் அத்தியாயத்தை சிவயோக சுவாமிகளுக்கு அர்ப்பணித்து, அதில் சுவாமியுடனான தனது அனுபவங்களை குறிப்பிட்டிருப்பதாகவும் அறிந்து கொண்டேன்.

நான் 2009ஆம் ஆண்டு ஜுன் மாதம் கலாநிதி ஜோர்ஜ் அவர்களை, அவரது இல்லத்தில் சந்தித்தபோது அவரும், அவரது பாரியாரும் அன்புடன் வரவேற்றார்கள். இவர் 1960 தொடக்கம் 1964வரை இலங்கைக்கான கனேடிய தூதுவராகக் கடமையாற்றியிருக்கிறார்.

சிவயோக சுவாமிகளின் சீடர்களுள் ஒருவராகிய சாந்தசுவாமி, இலங்கையின் கடைசி தேசாதிபதி சோல்பரி பிரபுவின் மகன் என்பது அனைவரும் அறிந்ததே. சோல்பரி பிரபுவுக்கு பீட்டர் பிரபு என்ற இன்னொரு மகனும் இருந்தார். இவர் பிரித்தானியாவின் தூதுவராக பல நாடுகளில் பணியாற்றியிருக்கிறார். இவரே கலாநிதி ஜேம்ஸ் ஜோர்ஜ் அவர்களுக்கு சிவயோக சுவாமிகளை அறிமுகம் செய்துவைத்தார்.

கலாநிதி ஜேம்ஸ் ஜோர்ஜ் அவர்கள் சிவயோக சுவாமிகளுடனான தனது முதலாவது சந்திப்பு தொடர்பாக என்னிடம் இவ்வாறு தெரிவித்தார்.

“I knocked quietly on the door to his modest thatched hut in Jaffna and a voice from within roared, ‘Is that the Canadian High Commissioner?’ I opened the door to find him seated cross legged on the floor - an erect, commanding presence, clad in a white robe, with a generous topping of white hair and long white beard. Well Swami, I began, that is just what I do, not what I am. ‘Then come and sit with me’, he laughed

uproariously. I felt bonded with him from that moment. He helped me to go deeper towards the discovery of who I am, and to identify less with the role I played.

கலாநிதி ஜேம்ஸ் ஜோர்ஜ் அவர்கள், இலங்கையில் தூதுவராக இருந்த காலத்தில், பத்துக்கும் மேற்பட்ட தடவைகள் யாழ்ப்பாணம் வந்து, சிவயோக சுவாமிகளை சந்தித்துள்ளார்.

நான் கலாநிதி ஜேம்ஸ் ஜோர்ஜ் அவர்களிடம் சிவயோக சுவாமிகள் பற்றி மேலும் ஏதாவது சொல்லுங்கள் என்று கேட்ட போது இவ்வாறு குறிப்பிட்டார்:

"I'm very glad to have my turn to pay tribute to Yogaswami. I think of him as one of the greatest spiritual pioneers of my lifetime, and in a broader sense, the catalyst for the gradual coming together of Eastern and Western spirituality. Because, what he was able to do was not only talk to me about the "Gospel According to St. John" and quote "in the beginning was the word" which is how the Gospel begins, and of course as a Christian, that was how I was brought up - but he was able to take me from that all the way to the question of "Who Are You? - you think you are the Canadian High Commissioner - nonsense - that's not who you are - that's what you do"! Then the vigor with which he would impress that so it wasn't just a mental idea, it was an experience - an experience from his presence to my presence. Now, as we're trying to remember and speak about him, he is here in that presence because that energy is birthless and deathless. That is the energy that the world needs if it is to chart a course away from the destruction it seems to be heading for currently. And, I think the change, the great "turning" its been called, the change of course is coming, and Yogaswami, even so long ago, had a hand in making that turn possible. That shift of consciousness - both in the East and the West."

நானும், கலாநிதி ஜேம்ஸ் ஜோர்ஜ் அவர்களும் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக ஆன்மீக விஷயங்கள் தொடர்பாக உரை யாடினோம். சிவயோக சுவாமிகள் பற்றி தான் எழுதிய நூலில் கையெழுத் திட்டு, நூலின் பிரதியொன்றை எனக்கு அன்பளிப்பாகத் தந்தார். இவரிடமிருந்து விடைபெறும் போது, கொழும்புத் துறையில் ஒரு குடிசையில் வாழ்ந்த சிவயோக சுவாமிகளின் அருட்கடாட்சமும், போதனைகளும் எவ்வளவு தூரம் சர்வதேச ரீதியில் வியாபித்துள்ளது என்பதை நினைத்து அக மகிழ்ந்தேன்.

**திருவடி வழிபாடு**

சிவயோக சுவாமிகள் அறுபது வருடங்களுக்கும் மேலாக வாழ்ந்த கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் சுவாமிகளின் அஸ்தி பிரதிஷ்டை செய்யப்பட்டு திருவடி வழிபாடு தினமும் நடைபெற்றுவருகிறது. சர்வதேச ரீதியில் பரந்து வாழும் அடியார்கள் கொழும்புத்துறை ஆச்சிரமத்தை சிவயோக சுவாமிகளின் புனிததலமாகக் கருதி யாத்திரை செய்து வருகிறார்கள். சுவாமிகளால் ஸ்தாபிக்கப்பட்ட யாழ்.சிவதொண்டன் நிலையம், மட்டக்களப்பு சிவதொண்டன் நிலையம் என்பனவற்றிலும் திருவடி வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. 1960 தொடக்கம் கொழும்பு மாநகரிலும் சிவயோக சுவாமிகள் வழிபாடு மாதந்தோறும் இடம்பெற்று வருகிறது. ஆரம்பத்தில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும், பின்னர் கொழும்பு வெள்ளவத்தை விவேகானந்தா வீதியில் நிரந்தரமான கட்டடத்தில் தனியான மண்டபமாக திருவடி நிலையம் அமைக்கப்பட்டு, இப்போது அங்கு பஜனை, கூட்டுப் பிரார்த்தனைகளுடன் திருவடி வழிபாடு நடத்தப்பட்டு வருகிறது.

இதற்கும் மேலாக சர்வதே சரீதியில் குறிப்பாக லண்டன், அவுஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளிலும் மாதாந்தம் சிவயோக சுவாமிகள் திருவடி வழிபாடு கூட்டுப் பிரார்த்தனைகளோடு கடந்த பல வருடங்களாகவே

இடம்பெற்று வருகின்றது. சிவயோக சுவாமிகளை நேரடியாக தரிசித்த அடியார்கள் தொடக்கி வைத்த இந்த வழிபாடானது, அடுத்தடுத்த தலைமுறைகளிலும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. சிவயோக சுவாமிகளது பிரார்த்தனை நிகழ்வுகள் சில சர்வதேச நாடுகளில் மாநிலங்கள் ரீதியாகவும் மாதாந்த வழிபாடாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

**சிவயோக சுவாமிகளின் உலக யாத்திரை**

சுப்பிரமுனிய சுவாமிகள், தனது குருநாதரான சிவயோக சுவாமிகளின் 125ஆவது பிறந்தநாளான 1997 மே மாதம் 29ஆம் திகதியன்று அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீனத்தில் ஒரு சிறப்பு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து நடத்தியிருந்தார். சிவயோக சுவாமிகளின் வெண்கல திருவுருவச் சிலையொன்றை அமைப்பித்து, பக்தி பூர்வமான வகையில் பூசை வழிபாடுகள் செய்யப்பட்டன. தொடர்ந்து சுப்பிரமுனிய சுவாமிகள் ஆசி வழங்கி சிவயோக சுவாமிகளின் வெண்கலச் சிலையை உலக யாத்திரைக்காக அனுப்பிவைத்தார்.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து சர்வதே சரீதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களின் தரிசனத்திற்காக ஏற்பாடு செய்யப் பட்டிருந்த உலக யாத்திரையானது, ஐக்கிய அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளை சென்றடைந்து பதினேழு வருடங்களின் பின், அதாவது 2014 ஏப்ரல் 10ஆம் திகதியன்று (சிவயோக சுவாமிகளின் ஐம்பதாவது குருபூசை நாளில்) யாழ்ப்பாண நகரத்தை வந்தடைந்தது.

உலக யாத்திரையாக எடுத்து வரப்பட்ட சிவயோக சுவாமிகளின் வெண்கலத் திருவுருவச் சிலை, இப்போது கீரிமலையிலுள்ள சிவபூமி மண்டபத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு, பூசை வழிபாடுகள்

நடத்தப்பட்டு வருகிறது. சிவயோக சுவாமிகள் கீரிமலை சிவபூமி மண்டபத்தில் வீற்றிருந்து, அடியார்களை ஆசீர்வதித்து வருவது சிறப்புக்குரியது.

**முடிவுரை**

கீழைத்தேசத்திலிருந்து தோற்றம் பெற்ற சுவாமி விவேகானந்தரால் 1897இல் உலக அரங்கில் இந்து மதம் பற்றிய ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டது. அந்த விழிப்புணர்வினால் இந்து மதத்தின் வேதாந்தச் சிந்தனைகள் சர்வதே ரீதியில் பரவ வழியேற்பட்டது. சிவயோக சுவாமிகள் நாடு கடந்து செல்லவில்லை மாநாடுகளில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் அவரது போதனைகள் உலக அரங்கில் இப்போதும் பேசப்படுவதை உணரலாம்.

எனது குருநாதர் சுப்பிரமுனிய சுவாமிகள் ஐக்கிய நாடுகள் சபையில் நடைபெற்ற உலக சமாதான மாநாட்டில் சைவசமயம் தொடர்பாக உரையாற்றுவதற்கு மூலகாரணமாக விளங்கியவர் சிவயோக சுவாமிகள். அமெரிக்கா சிக்காகோ நகரில் சுவாமி விவேகானந்தர் உரையாற்றியதன் நூறு ஆண்டுகள் நிறைவையொட்டி சிக்காகோவில் நடந்த சர்வமத பாராளுமன்றத்தில் இந்து சமயத்தை தலைமைப்படுத்தி உரையாற்றும் பெருமை சுப்பிரமுனிய சுவாமிகளுக்கு கிடைத்தமை சிவயோக சுவாமிகளின் அருட்கடாட்சமே சிவயோக சுவாமிகளது ஞானக் கொள்கைகளால் சுவாமிகளின் முகம் காணாத பல பிறநாட்டவர்களும் ஈர்க்கப்பட்டு, அவரது மார்க்கத்தைப் பின்பற்றி வருவது அனைவரும் அறிந்ததே. கடந்த பல தசாப்தங்களாக பெரும்பாலான மேலைத் தேசத்தவர்கள் மன நிம்மதியையே நாடிச் செல்கின்றனர். அவர்களுக்கு பொருளாதார வளம் இருக்கின்றது. எல்லாவித வசதிகளும் இருந்தும் வாழ்வில் ஏதோ ஒரு குறை இருப்பதை பலர் உணர்கின்றனர். இதற்குப் பதில் வெளியே இல்லை, தம்முள்ளே

தான் இருக்கின்றது என பலர் அகத்தேடலில் ஈடுபடுகின்றனர். இந்த உண்மையை தேடும் தாகம் கொண்டவர்களின் கேள்விகளுக்கு பொதுவாக உரிய பதில் கீழைத்தேச சமயங்களாகிய இந்து சமயம், பௌத்த சமயங்களிலேயே கிடைக்கின்றது. சிவயோக சுவாமிகளின் "தன்னைஅறி", (Know thy Self) "சும்மா இரு" (Be still or just be) எனும் அகத்தேடல் போன்ற போதனைகள் மேலை நாட்டவர்களை மேலும் கவர்கின்றது. சுவாமிகள் சமாதியாகி ஐம்பத்தெட்டு வருடங்கள் பூர்த்தியாகியும் அவருடைய ஆத்ம சிந்தனைப் பரவலாக்கம் அவரின் போதனைகள் அடங்கிய நற்சிந்தனை நூல் மூலமும், அவரின் வாழ்க்கை வரலாற்றுச் செய்திகள் மூலமும், அவரது சீடர்களின் மூலமும் சர்வதேசமெங்கும் வியாபித்துக் கொண்டிருக்கின்றது. வையகம் உள்ளவரை யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவயோக சுவாமிகளின் வாழ்வும் போதனைகளும் நிலைத்திருக்கும். அகவுலகில் இருந்து சுவாமிகள் தொடர்ந்தும் எம்மை ஆசீர்வதித்துக் கொண்டிருக்கின்றார். யோககுருநாதர் திருவடிபோற்றி!

Reference:
The Guru Chronicles by Himalyan Academy> USA
https://www.himalayanacademy.com/view/the-guru-chronicles

இந்து ஒளி: தீபம் 18 - சுடர் 4
Hindu Oli by All Ceylon Hindu congress
http://issuu.com/finder2000/docse=8363681/7405245

நூல்: சிவதொண்டன் தவத்திரு செல்லத்துரை சுவாமிகள்
வெளியீடு: நீர்வேலி அரசகேசரி பிள்ளையார் ஆலய அடியார்கள்
Sivathondan. org



கோப்பாய் தெற்கில் 1962ஆம் ஆண்டு பிறந்தவர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள். சிறுவயதிலேயே சமய ஆன்மீக விடயங்களில் நாட்டம் உடையவராக வாழ்ந்த அவர் தனது பதினேழாவது வயதில் சிறுவர்களை இணைத்து சைவச் சிறுவர் கழகம் எனும் அமைப்பை உருவாக்கி, அதன் மூலம் சமய, சமூகப் பணிகளையும் மேற்கொண்டு வந்தார்.

1982ஆம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து வருகைதந்த, யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவயோக சுவாமிகளின் சீடரும் அமெரிக்க ஹவாய் சைவ ஆதீன ஸ்தாபகருமாகிய குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் சைவச் சிறுவர்களின் அழைப்பின் பேரில் கோப்பாய் கிராமத்துக்கு முதன்முதலாக வருகை தந்தார். தொண்டுநாதன் சுவாமிகளின் வேண்டுகோளுக்கிணங்க சைவச் சிறுவர் கழகம் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம் என குருதேவரால் பெயரிடப்பட்டது. அடுத்த வருடம் குருதேவர் ஹவாயில் தான் பூசித்த சிவலிங்கத்தினை கோப்பாய் கிராமத்தில் பிரதிஷ்டை செய்தார்.

1987ஆம் ஆண்டு குருதேவரின் 60ஆவது ஜெயந்தி தினத்தன்று சிதம்பரம் நடராஜப் பெருமான் முன்னிலையில் தொண்டுநாதன் சுவாமிகளுக்கு குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் தீட்சை வழங்கினார். குருதேவர் இவரை இரண்டு ஆண்டுகள் மொறிசியஸ் நாட்டிலுள்ள தமது ஆச்சிரமத்தில் தொண்டாற்றுவதற்கு அனுப்பி வைத்தார். 1989ஆம் ஆண்டு தொண்டுநாதன் சுவாமிகளை குருதேவர் ஹவாய் சைவ ஆதீனத்துக்கு அழைத்தார். அங்கு சென்ற இவர் குருதேவரின் சீடர்களில் ஒருவராக பன்னிரண்டு ஆண்டுகள் குருதேவரின் திருவடியின்கீழ் வாழ்ந்து வந்தார்.

தொண்டுநாதன் சுவாமிகள் குருதேவருடன் பல நாடுகளுக்குச் சென்று குருதேவரின் உரைகளை தமிழில் மொழிபெயர்த்து வந்தார். பல சர்வதேச மாநாடுகளில் குருதேவருடன் கலந்து கொண்டதுடன் 2000ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற உலக சமாதான மாநாட்டில் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் உரையாற்றியபோது குருதேவருடன் தொண்டுநாதன் சுவாமிகளும் கலந்து கொண்டமை சிறப்புக்குரியது.

ஹவாய் சைவ ஆதீனத்தில் வாழ்ந்து வந்த தொண்டுநாதன் சுவாமிகள், குருதேவரின் மகாசமாதியின் பின்னர் அவரின் சக துறவிகளின் ஆசியுடன் மீண்டும் இலங்கைக்கு வந்தார். 2002ஆம் ஆண்டிலிருந்து இலங்கையிலும் அமெரிக்காவிலும் தனது ஆன்மீக சமய சமூகப் பணிகளைத் தொடர்ந்து வருகிறார்.

இவர் அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் இளைய தலைமுறையினருக்கு சைவ சமய பாசறை மற்றும் ஆன்மீக கருத்தரங்குகளை நடத்தி பெரும் சேவையாற்றி வருகிறார். அத்தோடு அமெரிக்காவில் மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை செய்வது, முதியோர் இல்லங்களுக்குச் சென்று அவர்களுக்கு ஆறுதல் அளிப்பது போன்ற மனித நேயப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறார். இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளையும், மாணவர்களுக்கு கல்வி மேம்பாட்டுக்கான உதவிகளையும் வழங்கி வரும் சுவாமிகள் பல இடங்களில் குடிநீர் வசதிகள் இன்றி அவலப்படும் குடும்பங்களுக்கு கிணறுகளையும், வன்னிப் பிரதேசங்களில் மாணவர்களின் சமய அறிவுக்காக அறநெறிப் பாடசாலைகளையும் அமைத்துக் கொடுத்துள்ளார். தொண்டுநாதன் சுவாமிகள் சிவபூமி அறக்கட்டளை, மனிதநேயம் அறக்கட்டளை ஆகியவற்றுடன் இணைந்து செயற்பட்டு வருவதையும் சிறப்பாகக் கூறலாம்.

இவர் உலகளாவிய ரீதியில் இதுவரை 56 நாடுகளுக்குச் சென்று ஆன்மீக சமய சமூகப் பணிகளை ஆற்றியுள்ளார். இவருக்கு குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் ரிஷி தொண்டுநாதன் என்ற தீட்சாநாமத்தை வழங்கியபோது "தீட்சாநாமத்திற்கு ஏற்ப வாழ்" என்றும் ஆசி வழங்கினார். இந்த தீட்சாநாமத்திற்கு அமைய சிவதொண்டு சிவதியானமே தனது வாழ்வின் முக்கிய குறிக்கோளாக கொண்டுள்ள இவருடைய பணிகள் தாய்நாட்டில் மட்டுமன்றி சர்வதேசத்திலும் தொடர்ந்து கொண்டிருப்பதை சிறப்பாகக் குறிப்பிடலாம்.

Guru Printers, 021 222 56